1970 ஆகஸ்ட் 31] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

வேண்டுமானால் பத்து பேர் இருக்கலாம். ஆனால் இண்டர்வியூ விற்கு ஆஜராகின்றவர்கள் ஆயிரக்கணக்கிலே இருக்கிறார்கள். அவர் களுக்குத் தங்கவோ மற்ற எந்த விதமான வசதியோ இல்லாமல், பஸ்களும் சரியான காலாகாலத்தில் கிடைக்காமல் பலரும் கஷ்டப் படும் நிலையிருக்கிறது. அதிலும் குறிப்பாக இந்த உத்தியோகத்தைப் பற்றி ஏதோ இண்டர்வியூ நடந்து, இதுகாறும் இதன் முடிவுகள் அறிவிக்கப்படவில்லை. இதுவும் துரிதமாக அறிவிக்கப்பட வேண்டு மென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட ஆசைப்படு கிறேன். இவ்வளவும் பேசிக்கொண்டு என்னுடைய உரையை முடித் துக்கொள்கிறேன்.

4. அமைச்சரின் விளக்க உரைகள்—தொடர்ச்சி.

(இ) நிலப்பறி இயக்கம் காரணமாகக் கைது செய்யப்பட்டவர்களின் மீதுள்ள வழக்குகளை திரும்பப்பெற்று விடுதலை செய்ய அரசு செய் துள்ள முடிவு குறித்து முதலமைச்சர் அவர்கள் விளக்கம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பொழுது மாண்புமிகு முதலமைச்சரவர்கள் விதி 82-ன் கீழ் ஓர் அறிக்கையை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, திருச்சி மத்திய சிறைச்சாலையிலிருக்கும், சட்டப் பேரவை உறுப்பினர் திரு. ஏ. கே. சுப்பையா அவர்கள், நம்முடைய மாண்புமிகு சட்டத்துறை அமைச்சரவர்களுக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள்.

மாண்புமிகு சட்டதுறை அமைச்சர் அவர்களுக்கு தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் சங்கத் தலைவர் ஏ. கே. சுப்பையா, எம். எல். ஏ. எழுதிக்கொண்டது.

எனது கட்சியும், மாநில விவசாயத் தொழிலாளர் சங்கமும், ஆகஸ்ட் 15, 16, 17 தேதிகளில் நடத்தவிருந்த நில மீட்சி இயக்கம் முடிந்து விட்டதால், கைது செய்யப்பட்டு சிறையில் இருக்கும் எங்கள் அனைவரையும் விடுதலை செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள் கிறேன். மேற்கொண்டு இந்த இயக்கம் நடத்தப்பட மாட்டாது.

இங்ஙனம்,
ஏ. கே. சுப்பையா,
எம். எல் ஏ.

இந்தக் கடிதத்தில் திரு. சுப்பையா எம். எல். ஏ., அவர்கள் விடுத்துள்ள வேண்டுகோளையும், மேற்கொண்டு இந்த இயக்கம் நடத்தப்பட மாட்டாது என்ற அவரது உறுதிமொழியையும் ஏற்றுக் கொண்டு நிலப்பறி இயக்கத்தின் காரணமாக கைது செய்யப்பட்டு சிறையில் உள்ளவர்கள் மீதுள்ள வழக்குகளை திரும்பப் பெற்று விடுதலை செய்ய அரசு முடிவு செய்துள்ளது. அதற்கான நடவடிக்கை எடுக்குமாறு ஆணையிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவில் முடிவுற்று, நாளைக் காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

ப. 37

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.